**ஸ்ரீ இராஜ இராஜன் கல்விக் குழுமத்தில் சுதந்திர தின விழாக்கொண்டாட்டம்**

ஸ்ரீ இராஜ இராஜன் கல்விக் குழுமத்தில் 77வது சுதந்திர தின விழா இன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் ஸ்ரீ S.K. ஜா, சீனியர் கமாண்டன்ட் மற்றும் ஸ்ரீ P.S. நகேரா, அசிஸ்டண்ட் கமாண்டன்ட், CISF 4th Reserve Battalion, Sivagangai District, ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். ஸ்ரீ S.K. ஜா, சீனியர் கமாண்டன்ட் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சிறப்பித்தார். மேலும் இவ்விழாவில் அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தரும் ஸ்ரீ இராஜ இராஜன் கல்விக் குழுமத்தின் கல்வி ஆலோசகரும் ஆன முனைவர் சொ.சுப்பையா அவர்கள் கலந்து கொண்டார். இதில் பொறியியல் கல்லூரி முதல்வர் திரு.இளங்கோ, துணை முதல்வர் திரு. மகாலிங்கம் சுரேஷ், கல்வியில் கல்லூரி முதல்வர்கள் திருமதி. அங்கையற்கண்ணி மற்றும் திரு. சிவக்குமார், பள்ளி முதல்வர் திருமதி வடிவாம்பாள், துணை முதல்வர் திரு. முத்துக்குமார், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உடனிருந்தனர்.





**சிவகங்கைமாவட்டத்திலேயே அதிக முறை ரத்தம் கொடுத்து பெருமை சேர்த்த ராஜராஜன் பொறியியல்கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள். சுதந்திர தினத்தன்று கௌரவித்த மாவட்டஆட்சியர் ஆஷா அஜித்.**

சிவகங்கைமாவட்டத்திலேயே அதிக முறை ரத்தம் கொடுத்த மாணவர்கள் என்று ஸ்ரீ ராஜராஜன் பொறியியல்மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களுக்கு இந்தஆண்டு விருது கிடைத்துள்ளது. சுதந்திர தினத்தன்று மாவட்ட அளவில் பல்வேறுதுறையினருக்கு வழங்கப்படும் இந்த விருதை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் மாவட்டஆட்சியர் அலுவலகத்தில் வழங்கினார். கல்லூரிக்கு பெருமை சேர்க்கும் இந்த விருதைநாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் சார்பாக ராஜராஜன் பொறியியல் மற்றும்தொழில்நுட்பக் கல்லூரி துணை முதல்வர் மகாலிங்க சுரேஷ் பெற்றுக் கொண்டார்.